(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 386/ 2021

**Depostitions of PW- 3 Witness for**

| | |
|---|---|
| Name | சேவியர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of April 2024.

Signature of Witness.

03.04.2024

6 ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் திருவில்லிபுத்தூர் ரைட்டன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது மனைவியாவார். அ.சா. 1 எனது மச்சினன் ஆவார். எதிரிகளை தெரியும். 24.05.2020 அன்று ஞாயிற்றுகிழமை இரவு 07.00 மணியளவில் எனது மகன் வனராஜ் அதிக போதையில் எதிரிகளோடு வந்தான். அப்போது நானும், எனது மனைவியும் வந்து எனது மகனை சத்தம்போட்டோம். காளியம்மன்கோவில் பக்கத்தில் வைத்து சத்தம்போட்டோம். அப்போது அ.சா. 1 அங்கு வந்தார். அவரும் எனது மகனை சத்தம்போட்டார். அப்போது எதிரி புதுமை எனது மச்சினன் அ.சா.1 ஐ பார்த்து தேவிடியாமகனே என்று அசிங்கமாக சொல்லி கன்னத்தில் அடித்துவிட்டார். நான் உடனே எப்படி என் மச்சினனை அடிக்கலாம் என்று எதிரி புதுமையுடன் சண்டைக்கு போனேன். அப்போதுஎதிரிகள் அனைவரும் சேர்ந்து கம்பியை வைத்து அ.சா. 1 ஐ தலையில் அடித்து ம ண்டையை

உடைத்துவிட்டார்கள். எனது மச்சினனுக்கு இரத்தமாக வந்தது. பாக்கியராஜ் மற்றும் அ.சா. 1னின் மனைவி மிக்கேல் அம்மாள் ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். இரத்தத்தை பார்த்தவுடன் எதிரிகள் எஸ்கேப் ஆகிவிட்டார்கள். போலீசுக்கு புகார் சொன்னோம். சண்டை நடந்துள்ளது வாங்கள் என்று சொன்னோம். போலீசார் எங்களை மருத்துவமனைக்கு போகும் படி சொன்னார்கள். மருத்துவமனைக்கு சென்று அ.சா. 1க்கு கட்டு போடப்பட்டது. போலீசார் வந்து கேட்டபோது எதிரிகள் சொந்தக்காரர்கள் என்பதால் அவர்கள் அப்பா அம்மாவிடம் கேட்டு விசாரித்துவிட்டு சொல்வதாக சொன்னோம். ஆனால் அவர்கள் சமாதானத்திற்கு வரவில்லை. 26ம் தேதி காலை 10.00 மணிக்கு போலீசார் வந்தார்கள். எனது மச்சினன் அ.சா. 1னிடம் புகார் கொடுக்கப்போகிறீர்களா என்று கேட்டார்கள். உடனே எனது மச்சினன் பக்கத்தில் இருந்த ஒரு நபர் மூலம் புகார் எழுதி உடனடியாக போலீசாரிடம் கொடுத்தார். தலையில் காயம் இருந்ததால் மேல் சிகிச்சைக்காக அ.சா. 1ஐ மதுரை அரசு மருத்துவமனைக்கு 28.05.2020 அன்று அனுப்பி வைத்தார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். பின்பு அங்கிருந்து வந்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் காண்பித்துவிட்டு வீட்டிற்கு வந்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

போலீசாருக்கு தகவல்சொன்னவுடன் போலீசார் சம்பவஇடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்ற விவரத்தை போலீசாரின் விசாரணையில் சொன்னேன். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் உறவினர் ஜான்சி என்பவர் ரவி என்பவர் மீது கொடுத்த புகாரை வாபஸ் வாங்க வேண்டும் என்பதற்காக எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரியல்ல.